**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.**

**O.S No.124/2016** **Date:05.03.2025**
**(D.W–2 )**

திரு. நாகராஜ் த/பெ.சுந்தரம்
**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :
சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1) தாவா சொத்து சம்மந்தமாக உள்ள பத்திரங்கள் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் பார்த்தது இல்லை. 1993ம் ஆண்டு செட்டில்மெண்ட் ஆவணத்தை மட்டும் பார்த்துள்ளேன். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் 1ம் பிரதிவாதியின் தாத்தா சென்னியப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது. தாவா சொத்து அருகில் எனது சொத்து உள்ளது என்பதற்கு ஆவணம் எதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் முன்பே விற்றுவிட்டேன். எனக்கு தாவா சொத்தின் அருகில் எந்த சொத்தும் இருந்ததில்லை என்றும், நான் வழக்கிற்காக இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2) நான் தற்போது பெருமாநல்லூர், ஈஸ்வரன் கோவில் வீதியில் வசித்து வருகிறேன். ஈஸ்வரன் கோவில் வீதி வீடுக்கும் தாவா சொத்திற்கும் இடையே 1 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும் என்றால் 400 மீட்டர் தொலைவு இருக்கும். தாவா சொத்திற்கு பட்டா எப்போது வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு வழங்கப்பட்ட பட்டா எதனால் ரத்து செய்யப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் அந்த பட்டாவை பார்த்ததில்லை. சலூன் கடையை ஒட்டி தென்புறமாக வாதி கணேசனின் கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். சலூன் கடைக்குள் சென்று கட்டிடத்தை பார்த்துள்ளேன் என்றால் பார்த்துள்ளேன் அது ஒரு ஒத்தை டாப்பு கட்டிடம் என்றால் சரிதான். சலூன் கடை கூரை அதற்கு தென்புறத்தில் உள்ள

சுவற்றில் கொய்யா கட்டை கல் பதித்து வைக்கப்பட்டுள்ளது என்றால் தனியாக சிமெண்ட் கால் வைத்து கட்டியுள்ளார்கள்.

3) நான் சொல்லும் செட்டில்மெண்ட் ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து ஏதேனும் போட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் குடியிருந்து வரும் வீட்டின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்று பிரதிவாதிகள் கேட்டுக் கொண்டதற்கு நாங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியில்ல.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஓம்./வி.காளிதாசன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி (முகூபொ),
அவிநாசி.